




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 315 08.05.2026 FRIDAY CHITHIRAI: 25 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 315 08.05.2026 வெள்ளிக்கிழமை சித்திரை : 25 விலை : ரூ.5/-


# ஆட்சி அமைக்க உரிமை கோரிய விஜய்யிடம்

# "தமிழக ஆளுநர் கூறியது என்ன?"

## தவெக ஆட்சி அமைப்பதை தடுக்க முயற்சியா? காங்., கம்யூ., விசிகவுக்கு தமிழக பாஜக பதிலடி



சென்னை: மே.8-

தமிழகத்தில் தவெக ஆட்சியமைப்பதை பாஜக தடுக்க முயல்கிறது என்று காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள், விடுதலை சிறுத்தைகள் கூறிவருவது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று பாஜக தலைமை செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் தவெக ஆட்சியமைப்பதை தடுக்க பாஜக முயல்கிறது என்று காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சிகள் கூறிவருவது வன்மையாக கண்டிக்கத்தக்கது. நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள் எந்த கட்சிக்கும் பெரும்பான்மையை அளிக்காத நிலையில், ஆளுநர் சட்டப்படி தன் கடமையை நிறைவேற்ற வேண்டும். மரபுப்படி ஆளுநர், தேர்தலுக்கு முந்தைய கூட்டணி வெற்றி பெற்றிருந்தால் அந்த அணிக்கு தலைமை தாங்கும் கட்சியை ஆட்சியமைக்க அழைக்கலாம். அல்லது அதிக இடங்களை பெற்ற கட்சி ஆட்சியமைக்க விருப்பம் தெரிவிக்குமேயானால், ஆதரவு தெரிவிக்கும் கட்சிகள் அல்லது வெற்றி பெற்ற உறுப்பினர்களின் ஆதரவு திருப்தி அளிக்கும் அளவுக்கு உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு அரசியலமைப்பு சட்டம் 164ன் கீழ் ஆளுநருக்கு உள்ளது. அதன் பின்னர் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க கால அவகாசம் அளிக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி ஏற்கெனவே தன் ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவை கடிதம் மூலம் அளித்துள்ள நிலையில், வேறு எந்த கட்சியும் முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், இவற்றையெல்லாம் குறிப்பிடாமல், வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு திருமாவளவனும், கம்யூனிஸ்டுகளும் பாஜகவை விமர்சனம் செய்வது கடும் கண்டனத்துக்குரியது.

ஐந்து ஆண்டு காலம் திராவிட மாடல் திமுக ஆட்சியில் நடைபெற்ற அவலங்களை, அக்கிரமங்களை, அராஜகங்களை, சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை, பெண்களுக்கெதிரான பாலியல் குற்றங்களை, அதிலும் குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை, போதை பொருள் புழக்கத்தை, மது அருந்தும் பழக்கம் உச்சத்திற்கு சென்றதை கண்டு கொள்ளாமல், அமைதி காத்து, கைகட்டி, வாய்பொத்தி நின்று, தமிழகம் சீரழிந்து போனதற்கு முழு பொறுப்பேற்க வேண்டிய கம்யூனிஸ்டுகளும், காங்கிரஸும், திருமாவளவனும் இப்போது நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டு, மக்கள் அளித்த தீர்ப்பை மதிக்காமல் பாஜகவை விமர்சிப்பது மலிவான அரசியல் தானே?

நேற்று வரை தவெகவை விமர்சித்ததோடு மட்டுமல்லாமல், விஜய்யை பாஜகவால் உருவானவர், பாஜகவின் 'பி' டீம் என்றெல்லாம் விமர்சித்த திருமாவளவன், ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு என்ற கனவில் மிதந்து கொண்டிருப்பது வெட்கக்கேடான செயல்.

ஜனநாயக ரீதியாக நடைபெற்ற தேர்தலின் முடிவை அனைவரும் மதித்து நடந்து கொள்ள வேண்டிய அதே வேளையில், அரசியலமைப்பு சட்டத்தின் படியே ஆட்சி அமைய வேண்டும்.

குதிரைப் பேரங்கள் தவிர்க்கப்பட வேண்டும், சந்தர்ப்பவாதம் முறியடிக்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் உறுதி செய்ய உருவாக்கப்பட்டுள்ள சட்டத்தின்படி ஆளுநர் முடிவெடுக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

## விஜய் விவகாரம்: ஆளுநருக்கு எதிராக தமிழக காங்கிரஸ் ஆர்ப்பாட்டம் அறிவிப்பு




சென்னை: மே.8-

"தனிப்பெரும் கட்சியான தவெகவை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைக்காததை கண்டித்து நேற்று (மே 08) காலை 11 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும்" என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது குறித்து காங்கிரஸ் மாவட்ட கமிட்டி தலைவர்களுக்கு அவர் எழுதிய கடிதம்: 2026 தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்படும் மத்திய பாஜகவை கண்டித்தும், அவர்களின் கைப்பாவையாக செயல்படும் ஆளுநரை கண்டித்தும் மாவட்ட தலைநகரங்களில் நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாபெரும் கண்டன் ஆர்ப்பாட்டம் நடத்திட தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் சார்பாக அண்ணா சாலை, தாராப்பூர் டயர் அருகில் நாளை காலை 11 மணியளவில் எனது தலைமையில் கண்ட ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் மத்திய அமைச்சர்கள், அகில இந்திய காங்கிரஸ் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை: மே.8-

"ஆட்சியமைக்க பெரும்பான்மை ஆதரவு தேவை. பெரும்பான்மை பலம் விஜய்யிடம் இல்லாததால், அதை உறுதிப்படுத்திய பின்னரே ஆட்சி அமைக்க அழைக்க முடியும்" என்று விஜய்யிடம் ஆளுநர் கூறியதாக லோக் பவன் விளக்கமளித்துள்ளது.

தவெக தலைவர் விஜய், ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை ஆளுநர் மாளிகைக்குச் சென்று நேற்று சந்தித்தார். அப்போது, ஆட்சி அமைக்க உரிமை கோரும் கடிதத்தை அவரிடம் வழங்கினார். இந்நிலையில், இன்று மீண்டும் விஜய், ஆளுநரை சந்திக்க ஆளுநர் மாளிகைக்குச் சென்று சந்தித்தார்.

இந்த சந்திப்பு 30 நிமிடங்களுக்கு மேலாக நடந்தது. இதனால் தமிழக அரசியல் களத்தில் பரபரப்பு ஏற்பட்டது. ஆளுநர் ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்தார் என்றும் பின்னர் இல்லை என்றும் மாறி மாறி செய்திகள் வெளியாகின. தவெக தரப்பும் சந்திப்பு பற்றி ஏதும் சொல்லவில்லை.

இந்நிலையில், இந்த சந்திப்பு தொடர்பாக ஆளுநர் மாளிகை அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில்: "தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், இன்று தவெக தலைவர் விஜய்யை ஆளுநர் மாளிகைக்கு அழைத்திருந்தார்.

அந்தச் சந்திப்பின்போது, தமிழக சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். ஆட்சியமைக்க தேவையான அந்த பெரும்பான்மை எண்ணை விஜய் காட்டவில்லை." என்று ஆட்சியமைக்க அழைப்பு விடுக்காதது குறித்து ஆளுநர் எடுத்துரைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் மாளிகையில் நடந்தது என்ன என்ற எதிர்பார்ப்பு குறித்து தவெக தரப்பில் இன்னும் மவுனம் கலைக்கப்படாத நிலையில், ஆளுநர் தரப்பு விளக்கம் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் 'இந்து தமிழ் திசை'க்கு, ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் விஜய் ஆளுநர் சந்திப்பு இணக்கமாகவே இருந்ததாகக் கூறுகிறது.

நிலையான அரசு..

மேலும், "பெரும்பான்மை பலம் இருப்பதை உறுதிப்படுத்திய பிறகே, ஆட்சி அமைக்க உரிமை கோரி அளித்த கடிதத்தை பரிசீலிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏனெனில், மாநிலத்தில் ஒரு நிலையான அரசு அமைய வேண்டும் என்பதையே ஆளுநர் விரும்புகிறார். பெரும்பான்மை பலம் உறுதிப்படுத்தப்பட்ட உடனேயே, விஜய் பதவியேற்கலாம்." என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## தவெக ஆட்சிக்கான தடைகளை தகர்ப்பாரா விஜய்? முன்னுதாரண 'சம்பவங்கள்' : ஒரு பார்வை

மேஜிக் எண் 118 ஐ எட்டமுடியாமல் தவித்து வருகிறது தவெக. விஜய் எதிர்பார்க்கும் கட்சிகள் இதுவரை பச்சைக் கொடி காட்டாததாலும், ஆட்சியமைக்க ஆளுநர் அழைப்பு விடுக்காததாலும் பதற்றத்தில் தவிக்கிறது தமிழக அரசியல் களம்.

தமிழக வரலாற்றில் முதன்முறையாக தொங்கு சட்டப்பேரவை அமைந்துள்ளது. தவெகவுக்கு 108 இடங்கள் உள்ள நிலையில், காங்கிரஸ் கூட்டணிக்குள் வந்ததால் மேலும் 5 இடங்கள் கிடைத்துள்ளது. ஆனாலும், சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்க தவெகவுக்கு இன்னும் 6 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை.

இந்தச் சூழலில்தான், தமிழக பொறுப்பு ஆளுநர் அர்லேகரை சந்தித்து ஆட்சியமைக்க அழைக்குமாறு கோரிக்கை வைத்தார் விஜய். ஆனாலும், பெரும்பான்மை உறுப்பினர்களின் பட்டியலை சமர்பிக்காததால், இதுவரை விஜய்யை ஆட்சியமைக்க ஆளுநர் அழைக்கவில்லை.

இது குறித்து பல்வேறு விமர்சனங்கள் வெளியான நிலையில், ஆளுநர் தரப்பில் வெளியான தகவலில், 'தமிழக ஆளுநர், தவெக தலைவர் விஜய்யை ஆளுநர் மாளிகைக்கு அழைத்து, தமிழக சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிப்பது இன்றியமையாதது. ஆட்சியமைக்க தேவையான அந்தப் பெரும்பான்மை எண்ணை நீங்கள் காட்டவில்லை என ஆளுநர் விளக்கினார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில், 'தனிப்பெரும் கட்சியாக உள்ள தவெகவை ஆளுநர் ஆட்சியமைக்க அழைத்திருக்க வேண்டும், பெரும்பான்மையை சட்டப்பேரவையில் நிரூபித்தால் போதுமானது; இதில் பாஜகவின் தூண்டுதலோடு ஆளுநர் அரசியல் செய்கிறார்' என ஒரு சில




கட்சிகள் வெளிப்படையாகவே குற்றம்சாட்டுகின்றன.

ஆனால், 'தவெக தனிப்பெரும் கட்சியாக நாங்கள் உள்ளோம், அதனடிப்படையில் ஆட்சியமைக்க அழைப்பு விடுக்க வேண்டும் என கோரிக்கை வைக்கவில்லை. மாறாக காங்கிரசின் 5 உறுப்பினர்கள் ஆதரவை காட்டி, தேர்தலுக்கு பிந்தைய எங்கள் கூட்டணிக்கு 113 உறுப்பினர்கள் ஆதரவு உள்ளது என குறிப்பிட்டு கோரிக்கை வைத்துள்ளார். இதன் காரணமாகவே '118' பேரின் ஆதரவு கேட்கப்படுகிறது' என ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் 3 உதாரணங்கள்:

தமிழகத்தில் இதுவரை தொங்கு சட்டப்பேரவை அமைந்தது இல்லை. 1977ல் எம்ஜிஆர் முதன்முறையாக வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றியதுபோது அதிமுக 30.4 சதவீத வாக்குகளை பெற்றிருந்தாலும், 130 இடங்களில் வென்று தனிப்பெரும்பான்மை பெற்றது. இதனால் எம்ஜிஆர் எந்த சிக்கலுமின்றி ஆட்சியமைத்தார். இப்போது தவெக 34.92 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தாலும், 108 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

2006 முதல் 2011 வரை கருணாநிதி தலைமையிலான திமுக, தமிழகத்தில் எந்த சிக்கலுமின்றி 'மைனாரிட்டி' அரசை நடத்தியது. அப்போது திமுக 96 இடங்களில் மட்டுமே வென்றிருந்தது. ஆனால், திமுகவுடனான தேர்தலுக்கு முந்தைய கூட்டணியில் காங்கிரஸ் 34, பாமக 18, சிபிஎம் 9, சிபிஐ 6 இடங்களில் வென்றிருந்ததால், அவர்கள் நிபந்தனையற்ற ஆதரவை திமுகவுக்கு வழங்கினர்.

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் அதிமுகவில் வெடித்த பிரளயங்களுக்கு பின்னர், ஓபிஎஸ் பதவி விலகியதால் சசிகலா 2017 பிப்ரவரி 5ல் அதிமுக சட்டப்பேரவைக் குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின்னர் அவர் அப்போதைய ஆளுநர் வித்யாசாகர் ராவிடம் ஆட்சியமைக்க அழைக்குமாறு கடிதம் கொடுத்தார். இந்த சமயத்தில்தான் ஓபிஎஸ் தர்மயுத்தத்தை தொடங்கினார்.

பெரும்பான்மையை நிரூபிக்க 120 எம்எல்ஏக்களுக்கும் மேலான ஆதரவு அப்போது சசிகலாவுக்கு இருந்தது. இருப்பினும் சுமார் 10 நாட்கள் சசிகலாவை ஆட்சியமைக்க அழைக்காமல் காலம் தாழ்த்தினார் ஆளுநர். பின்னர் 2017 பிப்ரவரி 14 சொத்துக் குவிப்பு வழக்கில் தீர்ப்பு வெளியாகி, பரப்பன அக்ரஹாரம் சிறையில் சசிகலா அடைக்கப்பட்டார். அப்போதுதான் அவர் எடப்பாடி பழனிசாமியை முதல்வராக்கிவிட்டு சென்றார். இந்தச் சம்பவத்தின்போது பெரும்பான்மை இருந்தும் சசிகலாவை ஆளுநர் ஆட்சியமைக்க அழைக்காதது அப்போது கடும் விமர்சனத்து உள்ளானது.

இப்போதைய தவெக ரூ ஆளுநர் மற்றும் பெரும்பான்மை மைனாரிட்டி விவகாரத்தில் இந்த உதாரணங்கள் போதுமானதாக இருந்தாலும், கர்நாடகா, மஹாராஷ்டிரா, பிஹாரில் தனிப்பெரும் கட்சிகள் ஆட்சியமைக்க இயலாமல் போவதும், அடுத்தடுத்த இடங்களை பிடித்த கட்சிகள் இணைந்து ஆட்சி அமைப்பதும் அடிக்கடி நடக்கும் சம்பவங்கள் ஆகும்.

கர்நாடகாவில் 2018ல் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக 104 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக இருந்தது. காங்கிரஸ் 80 இடங்களிலும், மதசார்பற்ற ஜனதா தளம் 37 இடங்களிலும் வெற்றி பெற்றிருந்தது. தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில் முதல்வராக பதவியேற்ற எடியூரப்பா, பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத சூழலில் பதவி விலகினார். அதன்பின்னர் வெறும் 37 இடங்களை பிடித்த மதசார்பற்ற ஜனதா தள தலைவர் குமாரசாமியை முதல்வராக்கியது காங்கிரஸ். இந்த ஆட்சி 14 மாதங்கள் நீடித்தது.

இதுபோல மஹாராஷ்டிராவில் சிவசேனா கட்சியையே உடைத்து ஏக்நாத் ஷிண்டேவை முதல்வராக்கியதும், என்சிபியை உடைத்து அஜித் பவாரை துணை முதல்வராக்கியதும் சமீபத்தில்தான் நடந்தது. இதுபோன்ற பின்னணியில்தான் திமுக அதிமுக கூட்டணி ஆட்சி என்ற குபீர் வியூகங்களும் இங்கே றெக்கை கட்டி பறக்கின்றன.

சசிகலா சம்பவம் தவிர்த்து தமிழகத்தில் இதுவரையில் அமைந்த அரசுகள் அனைத்தும் பெரும்பான்மை பலத்தை நிரூபித்தே ஆட்சியமைக்க கோரியதால், ஆளுநரின் தலையீடு பெரிதாக இருந்ததில்லை. ஆனால், இப்போது தவெகவால் 'மேஜிக் எண் 118'ஐ எட்ட முடியாத சூழலில், நிலைமை உண்மையிலேயெ தகிப்பை உருவாக்கியுள்ளது.

எவ்வளவு சீக்கிரம் 'மேஜிக் எண் 118'ஐ விஜய் எட்டிப்பிடிக்கிறாரோ, அவ்வளவுக்கு அவ்வளவு தமிழக அரசியல் களத்தில் பரபரப்புகள் தணியும். இதற்கு விஜய்யும் வேகமான, சாதுர்யமான முயற்சிகளை இறங்கி வந்து செய்ய வேண்டும். அதேபோல உண்டு அல்லது இல்லை என்று விசிக, இடதுசாரிகளும் தங்களின் ஆதரவு நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். இவை நடந்தால்தான், அரசியல் வியூகங்கள் அடுத்தக் கட்டத்தை நோக்கி நகரும்.

எப்படி பார்த்தாலும், இன்னும் சில நாட்களுக்கோ, சில வாரங்களுக்கோ அல்லது தமிழகத்தில் புதிய அரசு அமையும் வரையிலோ பரபரப்புகளுக்கும், தலைப்புச் செய்திகளுக்கும் பஞ்சமிருக்காது என்பதே உண்மை.

# தேர்தலில் சீட் வாங்கித் தருவதாக ரூ.25 லட்சம் மோசடி செய்தவர் கைது



டேராடுன்: மே.08-

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸை சேர்ந்தவர் கவுரவ் குமார் (42). இவர் தன்னை ராகுல் காந்தியின் உதவியாளர் என்றும், தன்னால் தேர்தலில் சீட், கட்சிப் பதவி வாங்கிக் கொடுக்க முடியும் என்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகளிடம் கூறி வந்துள்ளார்.

இந்நிலையில் உத்தராகண்ட் மாநில காங்கிரஸ் நிர்வாகியான பாவனா பாண்டே என்பவரிடம் ரூ.25 லட்சத்தை கவுரவ் குமார் பெற்றுள்ளார். அவருக்கு ராகுல் காந்தியிடம் கூறி தேர்தலில் சீட் பெற்றுத் தருவதாக ஏமாற்றியுள்ளார்.தன்னிடம் கனிஷ்க் சிங் என்ற பெயரில் அவர் அறிமுகமாகி பணத்தை ஏமாற்றியுள்ளதாக டேராடுன் போலீஸில் பாவனா பாண்டே புகார் அளித்தார். இதைத் தொடர்ந்து கவுரவ் குமாரை போலீஸார் கைது செய்துள்ளனர். அவர் இதேபோல் கோவா, உத்தராகண்ட், பிஹார் உள்ளிட்ட மாநிலங்களிலும் மோசடி செய்துள்ளது தெரியவந்துள்ளது.

## மேற்கு வங்கத்தில் மே 9ல் பதவியேற்பு விழா

# முதல்வர் பதவிக்கு சுவேந்து அதிகாரி, அக்னிமித்ரா பால் பெயர்கள் பரிசீலனை





கொல்கத்தா:மே.8-

மேற்கு வங்க மாநிலத்தின் அடுத்த முதலமைச்சராக பா.ஜ.க.வின் வெற்றி நாயகன் என்று அழைக்கப்படும் சுவேந்து அதிகாரி பதவியேற்க உள்ளதாகத் நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம், தனது அரசியல் குருவான மம்தா பானர்ஜியின் இடத்தை தட்டிப் பறிக்கிறார் சுவேந்து அதிகாரி. மேற்கு வங்க தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ள பாஜகவின் சட்டமன்றக் குழுக் கூட்டம், கொல்கத்தாவில் வெள்ளிக்கிழமை (மே 8) நடைபெறுகிறது. இக்கூட்டத்தில், சட்டமன்றக் கட்சித் தலைவராக சுவேந்து அதிகாரி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் மாநிலத் தலைவர் சாமிக் பட்டாச்சார்யா, சுவேந்து அதிகாரியின் பெயரை முன்மொழிய, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அதனை முறைப்படி அறிவிக்க உள்ளார். இதனைத் தொடர்ந்து, சுவேந்து அதிகாரி, சாமிக் பட்டாச்சார்யா மற்றும் பா.ஜ.க. தேசிய பொதுச் செயலாளர் சுனில் பன்சல் ஆகியோர் ஆளுநர் மாளிகைக்குச் சென்று ஆட்சி அமைக்க உரிமை கோர உள்ளனர்.புதிய அரசு பதவியேற்கும் விழா சனிக்கிழமை (மே 9) நடைபெறும் என்று சாமிக் பட்டாச்சார்யா உறுதிப்படுத்தியுள்ளார். நோபல் பரிசு பெற்ற கவிஞர் ரவீந்திர நாத் தாகூரின் பிறந்த நாளான ‘ரவீந்திர ஜெயந்தி’ அன்று இப்பதவியேற்பு விழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.மேற்கு வங்கத்தில் முதல் முறையாக அமையவுள்ள பா.ஜ.க. ஆட்சியின் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மத்திய அமைச்சர்கள், கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்களும் இந்த பிரம்மாண்ட விழாவில் பங்கேற்க உள்ளனர்.மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் என்பவர் மண்ணின் மைந்தராகவும், வங்காள மொழியில் பயின்றவராகவும் இருக்க வேண்டும் என்று அமித் ஷா ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தார். அந்த தகுதிகள் அனைத்தையும் பூர்த்தி செய்பவராக சுவேந்து அதிகாரி திகழ்கிறார். இதனிடையே முதல்வர் பதவிக்கான பந்தயத்தில் அசன் சோல் தெற்குத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள பா.ஜ.க.வின் அக்னிமித்ரா பாலின் பெயரும் பலமாக அடிபடுகிறது.இது குறித்து பா.ஜ.க.வின் மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகையில், “முதல்வர் பதவிக்கான பட்டியலில் சுவேந்து அதிகாரியின் பெயர் முதலிடத்தில் உள்ளது. அதே நேரத்தில், மாநிலத் தலைவர் சாமிக் பட்டாச்சார்யா மற்றும் மாநிலத் துணைத் தலைவர் அக்னி மித்ரா பால் ஆகியோரின் பெயர்களும் முன்மொழியப்பட்டுள்ளன” என்றார்.அசன் சோல் தெற்குத் தொகுதியில் திரிணாமூல் காங்கிரஸின் தபஸ் பானர்ஜியை 40,000க்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அக்னிமித்ரா பால் அபார வெற்றி பெற்றுள்ளார்.



# பிஎம்ஸ்ரீ பள்ளித் திட்டத்தில் இணையுமாறு தமிழகத்துக்கு மத்திய அரசு மீண்டும் கடிதம்

சென்னை::மே.08-

பிஎம்ஸ்ரீ பள்ளித் திட்டத்தில் இணையுமாறு தமிழகத்துக்கு மத்திய அரசு மீண்டும் கெடு விதித்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கையில் பிஎம்ஸ்ரீ பள்ளித் திட்டம் இடம்பெற்றுள்ளது. இதன்மூலம் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், இந்த திட்டத்தில் மும்மொழிக் கொள்கை இருப்பதால் தமிழகம் இணைய மறுத்துவிட்டது. இதன் காரணமாக, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டம் மூலமாக தமிழகத்துக்கு தரவேண்டிய சுமார் ரூ.3,500 கோடியை வழங்காமல் மத்திய அரசு நிறுத்தி வைத்தது. இந்த விவகாரம் கடந்த திமுக ஆட்சியில் பெரும் சர்ச்சையானது.

இந்நிலையில், மத்திய கல்வி அமைச்சகம் தமிழக அரசுக்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதில், பிஎம்ஸ்ரீ பள்ளித் திட்டத்தின்கீழ் பள்ளிகளை மேம்படுத்த உடனடியாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று கெடு விதித்துள்ளதாக கூறப்படுகிறது. தவெக தலைமையில் புதிய அரசு அமைய உள்ள சூழலில் மத்திய அரசு இந்த கடிதத்தை அனுப்பியது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.இந்த விவகாரத்தில் தவெக என்ன முடிவெடுக்கும், முந்தைய திமுக அரசுபோல எதிர்ப்பு தெரிவிக்குமா அல்லது ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமா, நிறுத்தி வைக்கப்பட்ட கல்விக்கான நிதியை மத்திய அரசிடம் இருந்து பெற என்ன மாதிரியான நடவடிக்கை எடுக்கும் என பல கேள்விகள் எழுந்துள்ளன. இதற்கிடையே, பள்ளிக்கல்வித் துறையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நலத் திட்டங்கள், அதனால் பயன் பெற்றவர்கள், தேவையற்ற செயல்பாடுகள் தொடர்பான முழு விவரங்களை அறிக்கையாகத் தருமாறு, விரைவில் ஆட்சி அமைக்க உள்ள தவெக கேட்டுள்ளதாக துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஹைதராபாத்: சாதாரண பெண் போல நள்ளிரவில் சோதனையில் ஈடுபட்ட போலீஸ் அதிகாரி



ஹைதராபாத்: மே.08-

ஹைதராபாத்தில் பெண்களின் பாதுகாப்பை ஆய்வு செய்ய பெண் போலீஸ் அதிகாரி ஒருவர் நள்ளிரவில் 3 மணி நேரம் தனியாக ஒரு சாலையில் நின்றார். அவருக்கு அவ்வழியாக சென்ற 40 பேர் பாலியல் தொந்தரவு கொடுக்க முயற்சித்துள்ளனர். அவர்கள் மீது மல்காஜ்கிரி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

ஹைதராபாத் மல்காஜ்கிரி காவல் ஆணையர் சுமதி. இவர் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே, அப்பகுதியில் பெண்கள் பாதுகாப்பு எவ்வாறு உள்ளது என தெரிந்து கொள்ள முடிவு செய்தார். அதன்படி, சீருடையில் செல்லாமல் சுடிதார் அணிந்து கொண்டு மல்காஜ்கிரி பேருந்து நிலையம் அருகே உள்ள ஒரு சாலையில் நள்ளிரவு 12.30 மணி முதல் அதிகாலை 3.30 மணி வரை தனியாக நின்றார்.

அப்போது அவ்வழியே சென்றவர்களில் படித்த இளைஞர்கள், அலுவலக ஊழியர்கள், குடிபோதையில் இருந்தவர்கள் என 40 பேர் இவரை அணுகி, பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளனர். அப்போது அங்கு மறைந்திருந்த போலீஸார் அவர்களை பிடித்துச் சென்று காவல் நிலையத்தில் அமர வைத்தனர். ஒரு பெண் தனியாக இருந்தால் அப்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுப்பீர்களா என தங்கள் பாணியில் விசாரித்தனர். பிறகு அவர்களின் குடும்பத்தினரை வரவழைத்து விவரங்களை எடுத்துக் கூறினர். இதுகுறித்து 40 பேர் மீது வழக்குப் பதிவு செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் குறித்து காவல் துறை ஆணையர் சுமதி கூறுகையில், “எனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் பெண்களின் பாதுகாப்பை அறிய தீர்மானித்தேன். அதனால் நள்ளிரவில் சாலையில் தனியாக நின்றேன். 40 பேர் என்னிடம் வந்து வம்பிழுத்தனர். தகாத வார்த்தைகளைப் பேசினர். இதில் மாணவர்களே அதிகம். மது அருந்தியவர்கள், கஞ்சா உபயோகித்தவர்களும் இதில் உள்ளனர். அவர்கள் அனைவரையும் விசாரித்து, அவர்களின் குடும்பத்தினரை வரவழைத்து நடந்தவற்றை கூறி கவுன்சிலிங் செய்தோம். போதை ஆசாமிகளுக்கு அபராதம் விதித்தோம். கஞ்சா ஆசாமிகளிடம் தொடர்ந்து விசாரித்து வருகிறோம். தனியாக உள்ள பெண்களிடம் வம்பிழுத்தால் தண்டனையில் இருந்து தப்ப முடியாது என்ற பயம் ஆண்களிடையே வரவேண்டும் என்பதற்காக இப்படி செய்தோம்” என்றார்.

பெண் போலீஸ் அதிகாரியின் இந்த செயலை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர். சுமதி கடந்த 25 ஆண்டுகளுக்கு முன் டிஎஸ்பியாக இருந்தபோது காஜிபேட்டை ரயில் நிலையம் அருகே நள்ளிரவில் தனியாக நின்று அவருக்கு பாலியல் தொல்லை கொடுத்த பலரை கைது செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹிமந்த பிஸ்வா சர்மா ராஜினாமா: அசாமில் மே 12ம் தேதி புதிய அரசின் பதவியேற்பு விழா



குவாஹாட்டி:மே.8-

அசாம் பேரவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, மொத்தம் உள்ள 126ல் 102 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடர்ந்து 3வது முறையாக இக்கூட்டணி ஆட்சியை தக்கவைத்துக் கொண்டது.

இதனிடையே, மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா மற்றும் ஹரியானா முதல்வர் நயாப் சிங் சைனி ஆகியோர் அசாம் மாநிலத்துக்கான மத்தியப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஓரிரு நாளில் பாஜகவின் மத்தியப் பார்வையாளர்கள் குவாஹாட்டிக்கு வருவார்கள் என்றும், அதன் பிறகு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏக்கள் அடுத்த முதல்வரை தேர்ந்தெடுப்பார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், ஹிமந்த பிஸ்வா சர்மாவே மீண்டும் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட அதிக வாய்ப்புள்ளதாக மாநில பாஜக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புதிய அரசு பதவியேற்பு விழா மே 12ம் தேதி நடைபெற உள்ளது. இந்நிலையில், அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, ஆளுநர் லட்சுமண் பிரசாத் ஆச்சார்யாவிடம் தனது ராஜினாமா கடிதத்தை நேற்று சமர்ப்பித்தார். புதிய முதல்வர் மற்றும் அமைச்சரவை நியமிக்கப்படும் வரை தற்காலிகமாக பதவியில் தொடருமாறு ஆளுநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மம்தாவை வெளியேற்ற பாஜக எம்.பி. வலியுறுத்தல்

புதுடெல்லி:மே.8-

மேற்குவங்க தேர்தலில் தோல்வியடைந்த திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா, “தேர்தலில் நாங்கள் தோல்வியடையவில்லை, எங்கள் வெற்றி திருடப்பட்டுள்ளது. முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய மாட்டேன்” என கூறிவருகிறார்.

இது குறித்து பாஜக நியமன எம்.பி.யும், பிரபல வழக்கறிஞருமான மகேஷ் ஜெத்மலானி கூறும்போது, "மம்தாவின் நடத்தை மன்னிக்க முடியாதது. இது ஒட்டுமொத்த ஜனநாயக நடைமுறைக்கு சவாலான செயல். தேர்தல் முடிவு வெளியாகிவிட்டால், முதல்வர் பதவி முடிந்து விடுகிறது. பதவியை ராஜினாமா செய்ய முடியாது என கூறுவது அவமதிப்பு. அவருக்கு பாடம் புகட்ட வேண்டும்.

வீண் பிடிவாதம் செய்வது அவரது நடத்தை மம்தா தனது பதவியை ராஜினாமா செய்யவில்லை என்றால், அவரை ஆளுநர் பதவி நீக்கம் செய்ய வேண்டும். அத்துமீறும் மம்தாவை காவல்துறையினரை அனுப்பி வலுக்கட்டாயமாக வெளியேற்ற வேண்டும்" என்றார்.

பதவி நீக்குங்கள்: மம்தா பானர்ஜி நேற்று கூறும்போது, "அவர்கள் என்னைப் பதவி நீக்கம் செய்யட்டும். அந்த நாளை ஒரு கருப்புத் தினமாக நான் கருதுவேன். தேர்தலுக்கு பிறகு நடந்த வன்முறை தொடர்பாக நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்படும்" என்றார்.

# மேற்கு வங்கம், தமிழக தேர்தல் முடிவால் ஐபேக் ஒப்பந்த திட்டத்தை கைவிட்டது சமாஜ்வாதி



லக்னோ:மே.08-

மேற்கு வங்கம், தமிழகம் ஆகிய மாநிலங்களில் ஆட்சியில் இருந்த கட்சிகள் தோல்வியை சந்தித்ததால், ஐபேக் ஆலோசனை நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யும் திட்டத்தை சமாஜ்வாதி கட்சி கைவிட்டுள்ளது.தேர்தல் வியூகம் மற்றும் பிரச்சாரங்களைத் திட்டமிட இந்திய அரசியல் செயற்குழு (ஐபேக்) என்ற ஆலோசனை நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மேற்கு வங்கத்தில் தேர்தல் வியூகங்களை வகுக்க ஐபேக் நிறுவனத்துடன் திரிணமூல் காங்கிரஸ் கட்சி ஒப்பந்தம் செய்திருந்தது.இந்நிறுவனத்தின் கொல்கத்தா அலுவலகத்தில், அதன் துணை நிறுவனர் பிரதிக் ஜெயின் மீதான நிதி மோசடி வழக்கு தொடர்பாக அமலாக்கத்துறை சோதனை மேற்கொண்ட போது, முதல்வராக இருந்த மம்தா பானர்ஜி ஐபேக் அலுவலகத்தில் அதிரடியாக உள்ளே புகுந்து ஆவணங்களை எடுத்துச் சென்றார். திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வியூகத் திட்டங்களை எடுத்துச் செல்ல அமலாக்கத் துறை திட்டமிட்டு ரெய்டு நடத்தியதாக அவர் குற்றம் சாட்டினார். தமிழகத்தில் திமுக.வும் ஐபேக் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து தேர்தல் வியூகம் மற்றும் பிரச்சார திட்டங்களை வகுத்ததாகக் கூறப்படுகிறது.

உ.பி.யில் 2027ம் ஆண்டில் சட்டப்பேரவை தேர்தலை சந்திக்கவுள்ள சமாஜ்வாதி கட்சியும் ஐபேக் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்ய திட்டமிட்டிருந்தது. மேற்கு வங்கம், தமிழகத்தில் ஆளும் கட்சிகள் தோல்வியைச் சந்தித்ததால், ஐபேக் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யும் திட்டத்தை சமாஜ்வாதி கைவிட்டு, தங்களின் சொந்த வியூகங்களை வகுக்க திட்டமிட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# “இடையூறு செய்யும் ஆளுநரை எதிர்க்கும் துணிவு விஜய்யிடம் உள்ளதா?

“சென்னை:மே.8-

‘தனிப்பெரும் கட்சியாக தவெக வந்த பிறகும், ஆட்சி அமைக்க இடையூறு செய்கிறார் ஆளுநர். ஆளுநரை எதிர்ப்பது என்பது பாஜகவை எதிர்ப்பதாகும். அதற்கு கொள்கை உறுதியும் துணிவும் வேண்டும். அது உள்ளதா விஜய்யிடம்?’ என விசிக முதன்மைச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ்கேள்வியெழுப்பியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,‘தனிப்பெரும் கட்சியாக தவெக வந்த பிறகும், ஆட்சி அமைக்க இடையூறு செய்கிறார் ஆளுநர். இதைக் கண்டிக்க அஞ்சுகிறது தவெக.இதுவே 108 எண்ணிக்கை திமுகவிடம் இருந்து, ஆளுநர் இப்படி இழுத்தடித்தால் என்ன நடந்திருக்கும்? சட்டமன்றத்தில் ஆளுநர் உரையின் போது ஆர்.என்.ரவிக்கு நடந்தது போல் நடந்திருக்கும்.ஆளுநரை எதிர்ப்பது என்பது பாஜகவை எதிர்ப்பதாகும். அதற்கு கொள்கை உறுதியும் துணிவும் வேண்டும். அது உள்ளதா விஜயிடம்?’ எனத் தெரிவித்துள்ளார்

# சொகுசுக் கப்பலில் ஹன்டா வைரஸ் பாதிப்பால் 3 பேர் உயிரிழப்பு




புதுடெல்லி: மே.08-

மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் சுமார் 150 பயணிகளுடன் நிறுத்தப்பட்டுள்ள சொகுசுக் கப்பல் ஒன்றில் ‘ஹன்டா வைரஸ்’ தொற்று ஏற்பட்டுள்ளது. இதன் பாதிப்பால் 3 பயணிகள் உயிரிழந்தனர்.மேலும் பலர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வைரஸ் மனிதர்களிடையே பரவக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கலாம் என்ற தகவல் சர்வதேச அளவில் அச்சத்தை அதிகரித்துள்ளது. இந்த ஹன்டா வைரஸ் எலிகள் மற்றும் பெருச்சாளிகள் மூலம் மனிதர்களுக்குப் பரவுகிறது.அவற்றின் எச்சில், சிறுநீர் அல்லது கழிவுகளுடன் நேரடித் தொடர்பு ஏற்படும்போது பாதிப்பு உண்டாகிறது. ஆனால், இந்த வைரஸால் எலிகளுக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லை. எலிக் கழிவுகள் படிந்த இடங்களைச் சுத்தம் செய்யும்போது, அந்த நுண்துகள்கள் காற்றில் கலந்து, அவற்றை சுவாசிப்பதன் மூலம் பெரும்பாலானோர் பாதிக்கப்படுகின்றனர்.பொதுவாக ஹன்டா வைரஸ் மனிதர்களிடையே பரவுவது மிக அரிது. இருப்பினும், தென் அமெரிக்காவில் காணப்படும் ‘ஆண்டீஸ்’ வகை வைரஸ் மட்டும் நெருங்கிய தொடர்புகள் மூலம் மனிதர்களிடையே பரவ வாய்ப்புள்ளது. தற்போது கப்பலில் ஏற்பட்டுள்ள பாதிப்பும் இவ்வகையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. ஆனால், உலகின் வெவ்வேறு பகுதிகளில் இவ்வைரஸ் வெவ்வேறு விதமாகச் செயல்படுகிறது.

சில வகைகள் நுரையீரலைப் பாதிக்கும்; சில வகைகள் சிறுநீரகம் மற்றும் ரத்த நாளங்களைப் பாதிப்பவையாக உள்ளன. காய்ச்சல், தசை வலி மற்றும் வயிற்று உபாதைகள் ஹன்டா வைரஸ் பாதிப்பின் ஆரம்பகட்ட அறிகுறிகளாகும். இவை ஒரு வாரம் முதல் எட்டு வாரங்களுக்குள் வெளிப்படும். ஆரம்பத்தில் இது சாதாரணக் காய்ச்சல் போன்றே தோன்றும்.

அமெரிக்கக் கண்டங்களில் பரவும் ஹன்டா வைரஸ், நுரையீரலில் நீர் கோர்த்துக் கொள்ளும் நிலையை உருவாக்கி, உயிருக்கும் உலை வைக்கும். உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, நுரையீரல் பாதிப்பு ஏற்படும்போது இறப்பு விகிதம் 50% வரை இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால், ஐரோப்பா மற்றும் ஆசியாவில் இதன் பாதிப்பு 1 முதல் 15% ஆக மட்டுமே உள்ளது. ஹன்டா வைரஸைக் குணப்படுத்தத் தடுப்பூசிகளோ அல்லது நேரடி மருந்துகளோ இல்லை.காய்ச்சலைக் குறைத்தல், உடலில் நீர்ச்சத்தைப் பராமரித்தல் மற்றும் செயற்கை சுவாசக் கருவிகளின் மூலமே சிகிச்சை அளிக்கப்படுகிறது. எலிகளுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்ப்பதே மிகச் சிறந்த பாதுகாப்பாகும். சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் ஆபத்தைக் குறைக்கலாம்.கப்பலில் நிலைமை கவலைக்கிடமாக இருந்தாலும், நிலப் பகுதியில் உள்ள பொது மக்களுக்கு உடனடி ஆபத்து ஏதுமில்லை என்று சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ‘எம்.வி. ஹோண்டியஸ்’ கப்பலில் உள்ள நிலைமை மிகவும் கவலைக்குரியதாக இருப்பதாகப் பயணி ஜேக் ரோஸ்மேரின் தெரிவித்துள்ளார்.

# பெரும்பான்மையை சட்டமன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும், ராஜ் பவனில் அல்ல

## ஆளுநரை விமர்சித்து கமல் ஹாசன் பதிவு




சென்னை:மே.8-

தமிழக சட்டமன்றத் தேர்தலில் 108 தொகுதிகளை வென்றுள்ள தமிழக வெற்றிக் கழகம், தங்களை ஆட்சியமைக்க அழைக்குமாறு தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரிடம் கோரியது. ஆனால், தற்போதுவரை ஆளுநர் அழைப்பு விடுக்கவில்லை.

ஆளுநரின் இந்த நடவடிக்கையை விமர்சிக்கும் விதமாக நாடாளுமன்ற உறுப்பினரும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல் ஹாசன் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளதில் கூறியுள்ளதாவது; தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரத்தை மக்கள் எந்தக் கட்சிக்கும் வழங்கவில்லை.இந்த முடிவு தமிழ்நாட்டு வரலாற்றில் முன்னெப்போதும் நிகழாதது. என் சகோதரர் மு.க.ஸ்டாலின் 'மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம்; பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்' என்று அறிவித்திருக்கிறார். அவரது அரசியல் முதிர்ச்சியை நான் மதிக்கிறேன். இப்போது அரசியலமைப்பு பொறுப்பில் இருப்பவர்களும் அதே கடமையை நிறைவேற்ற வேண்டும். இது கோரிக்கை அல்ல, அவர்களின் அரசியலமைப்புக் கடமைக்கான நினைவூட்டல். விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வென்றுள்ளது. அவரை ஆட்சியமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ்நாட்டு மக்களின் ஆணையை அவமதிப்பதாகும்.233 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இன்னும் பதவியேற்க முடியாமல் இருக்கிறார்கள். இது மாநிலத்திற்கு நேரும் அவமானம்; மக்களாட்சிக்கு ஏற்படும் சேதம். 'பெரும்பான்மையை சட்டமன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும், ராஜ் பவனில் அல்ல' என எஸ்.ஆர்.பொம்மை வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. நான் பேசிக்கொண்டிருப்பது கட்சி அரசியல் அல்ல. ஓர் இந்தியக் குடிமகனின் கொள்கைக் குரல் இது. தமிழ்நாட்டு மக்களின் தீர்ப்புக்கு மரியாதை கிடைத்தே ஆகவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# புதுச்சேரி விடுதியில் தமிழக அதிமுக எம்எல்ஏக்கள்: இபிஎஸ் விரைவில் ஆலோசனை



புதுச்சேரி: மே.08-

புதுச்சேரி விடுதிக்கு தமிழக அதிமுக எம்எல்ஏக்கள் வந்து கொண்டு இருக்கின்றனர். இவர்களுடன் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விரைவில் ஆலோசனை இங்கு நடத்த இருகிறார்.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஆளும் கட்சியான திமுக, எதிர்க்கட்சியான அதிமுக ஆகிய இரு திராவிட கட்சிகளை பின்னுக்கு தள்ளி தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சியை கைப்பற்றும் அளவுக்கு தவெகவுக்கு தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை.

இதனால் தவெக ஆட்சி அமைக்க ஆதரவு தரும்படி காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட், இந்திய. கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு கடிதம் அனுப்பினார். இதில் திமுக கூட்டணியில் இருந்து வெளியேறிய காங்கிரஸ் தனது 5 எம்எல்ஏக்களுடன் நிபந்தனையுடன் தவெகவுக்கு ஆதரவு அளித்தது. மேலும், அதற்கான கடிதத்தையும் விஜயிடம் காங்கிரஸ் கட்சியினர் நேரில் சந்தித்து வழங்கினர்.இதனால் தவெக ஆட்சி அமைக்க எம்எல்ஏக்கள் பலம் 113 ஆக உயர்ந்தது. இதனால் தன்னை ஆட்சி அமைக்க அழைக்கும்படி தமிழகத்தின் தற்போதைய பொறுப்பு ஆளுநரை தவெக தலைவர் விஜய் சந்தித்து எம்எல்ஏக்கள் ஆதரவு கடிதத்தை வழங்கினார். இருப்பினும் போதிய எம்எல்ஏக்கள் ஆதரவு இல்லாததால் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கப்படவில்லை. மேலும், 118 எம்எல்ஏக்கள் பட்டியலுடன் வந்தால்தான் ஆட்சி அமைக்க முடியும் என பொறுப்பு ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அதிமுக எம்எல்ஏக்கள் ஆலோசனை கூட்டம், நேற்று சென்னை பசுமை வழி சாலையில் உள்ள பழனிசாமி இல்லத்தில் நடந்தது. இதில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தலைமையிலான எம்எல்ஏக்கள் தவெகவுக்கு ஆதரவு அளிக்க வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.ஆனால் இதனை பழனிசாமி மற்றும் முன்னாள் அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் ஆகியோர் ஏற்கவில்லை என கூறப்படுகிறது. இக்கூட்டத்துக்கு பின் பேசிய அதிமுக துணை பொதுச் செயலாளர் முனுசாமி, 'தவெகவுக்கு எந்த வகையிலும் அதிமுக ஆதரவு அளிக்காது' என பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஒப்புதலுடன் அறிவிப்பதாக கூறினார்.இதனையடுத்து அதிமுகவின் 46 எம்எல்ஏக்களும் புதுச்சேரி பூர்ணாங்குப்பத்தில் உள்ள 'த ஷோர் திரிஷ்வம்' ரிசார்ட்டுக்கு வந்து தங்குமாறு கட்சி மேலிடம் இருந்து தகவல் கிடைக்கவே, தொடர்ந்து அதிமுக எம்எல்ஏ ஒவ்வொருவராக ரிசார்ட்டுக்கு வர தொடங்கினர்.அங்கு அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்று வரை ஓ.எஸ் மணியன், தளவாய் சுந்தரம், சேவூர் ராமச்சந்திரன், மோகன், சொரத்தூர் ராஜேந்திரன், அருள்மொழி தேவன், அக்ரி கிருஷ்ண மூர்த்தி, வெங்கடாசலம் உள்பட 25 அதிமுக எம்எல்ஏக்கள் வந்துள்ளனர். தொடர்ந்து மற்றவர்களும் வர உள்ளனர். இதையடுத்து அங்கு புதுச்சேரி போலீஸார் பாதுகாப்புப் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் செய்துள்ளார். இதனிடையே அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி இன்று அல்லது நாளை புதுச்சேரி வர உள்ளதாகவும், அப்போது எம்எல்ஏக்களுடன் ஆலோசனை நடத்தி முக்கிய முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிகிறது.



# ஓய்வுபெறும் நாளிலேயே ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணை: 70 பேருக்கு வழங்கியது இபிஎஃப்ஓ

## மத்திய அரசு 'பிரயாஸ்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது

சென்னை: மே.8-

'பிரயாஸ்' திட்டத்தின் கீழ், ஓய்வுபெறும் நாளிலேயே ஊழியர்களுக்கான ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளை 70 பேருக்கு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் வழங்கியது.

மத்திய அரசு 'பிரயாஸ்' என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஓய்வு பெறும் ஊழியர்கள், ஓய்வுபெறும் நாளிலேயே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும். அதன்படி, ஏப்ரல் மாதத்தில் பணி மூப்பு காரணமாக, ஓய்வு பெற்ற 70 ஊழியர்களுக்கு ஓய்வூதிய வழங்கல் ஆணைகளை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் (இபிஎஃப்ஓ) சென்னை மண்டலம் வழங்கி சிறப்பித்தது.சென்னை, ராயப்பேட்டை மண்டல அலுவலக வளாகத்தில், நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதிய வழங்கல் ஆணைகளை மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர் தேபி பிரசாத் பட்டாச்சார்யா வழங்கினார்.

நிகழ்ச்சியில், மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர் (ஓய்வூதியம்) நீரஜ் சிங், உதவிஆணையர்கள் பிபின்குமார், சந்திரசேகரன், கணக்கு அலுவலர் (ஓய்வூதியம்) ஏ.பிரகாஷ், மேற்பார்வையாளர் கே.ஆனந்தி, முதன்மை அதிகாரி சு.செந்தில்வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

# புதுச்சேரி விடுதியில் அதிமுக எம்எல்ஏக்கள் முகாம் ஏன்? கட்சியின் மாநிலச் செயலாளர் அன்பழகன்



புதுச்சேரி: .மே.8-

அதிமுக எம்எல்ஏக்கள் புதுச்சேரியில் முகாமிட்டிருப்பது ஏன் என்று அக்கட்சியின் புதுவை மாநிலச் செயலாளர் அன்பழகம் விளக்கமளித்துள்ளார். மேலும், மு.க. ஸ்டாலின் தோல்விக்கு எடப்பாடி பழனிசாமி மனம் வருந்தினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.புதுச்சேரியில் உள்ள தனியார் ரிசார்ட்டில் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் 25 க்கும் மேற்பட்டோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த ரிசார்ட்டுக்கு புதுச்சேரி அதிமுக மாநிலச் செயலாளர் அன்பழகன் எம்எல்ஏ இன்று காலை வந்தார். அப்போது அவர் கூறியதாவது:திமுக தலைவர் ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்ததற்கு எடப்பாடி பழனிசாமி வருந்தினார். அதிமுக ஒரு எஃகு கோட்டை. இதில் எந்த ஓட்டையும் இல்லை. எடப்பாடி பழனிசாமி, அதிமுக எம்எல்ஏக்களை கடலில் குதிக்கச் சொன்னாலும் அவர்கள் குதிப்பார்கள். எடப்பாடி பழனிசாமிதான் தலைமை பண்புள்ளவர். சென்னையில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் எம்எல்ஏக்கள் புதுச்சேரிக்கு வந்துள்ளனர். அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உத்தரவின் பேரில் தான், அதிமுக எம்எல்ஏக்கள் புதுச்சேரி விடுதியில் தங்கி உள்ளனர். ஓரிரு நாட்களில் எடப்பாடி பழனிசாமியும் விடுதிக்கு வருவார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# தமிழகத்தின் முக்கிய இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய உளவுத் துறை அறிவுறுத்தல்

சென்னை:மே.8-

தமிழகத்தின் முக்கிய இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய உளவுத் துறை போலீஸார் எச்சரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் தவெக தலைவர் விஜய் இன்னும் ஆட்சி அமைக்காத நிலையில், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளதாக உளவுத் துறை சுட்டிக்காட்டி, இந்த அறிவுறுத்தலை வழங்கி உள்ளதாக காவல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. ஆனாலும் ஆட்சி அமைக்க குறைந்தது 118 எம்எல்ஏக்கள் தேவை என்பதால் பெரும்பான்மையைப் பெற முடியாத நிலையில் தவெக உள்ளது. எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காததால், கூட்டணி ஆட்சி அமைப்பதில் தவெக மும்முரம் காட்டி வருகிறது.

சுயேச்சை வேட்பாளர்கள் யாரும் இல்லாத நிலையில், 5 எம்எல்ஏக்களை வைத்துள்ள காங்கிரஸ் உடன் தவெக கைகோத்துள்ளது. இதனால் தவெகவின் பலம் 113 ஆக உயர்ந்துள்ளது. தற்போது விசிக மற்றும் கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவை தவெக கேட்டுள்ளது. ஆதரவு அளிப்பது தொடர்பாக கம்யூனிஸ்ட்கள், விசிக ஆலோசித்து வருகின்றன.

அதிமுக எம்எல்ஏக்கள் அனைவரும் புதுச்சேரியில் முகாமிட்டுள்ளனர். திமுகவும் தனியாக எம்எல்ஏ கூட்டத்தை நடத்துகிறது. இதனால் தமிழக அரசியல் களம் பரபரப்பாக காணப்படுகிறது.

இந்நிலையில், ஆளுநருக்கு எதிர்ப்பு தெரிவித்தும், விஜய்க்கு முதல்வராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க வலியுறுத்தியும் மெரினா கடற்கரையில் தவெகவினர் திரள உள்ளதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவியது. இதையடுத்து போலீஸார் அந்தப் பகுதிகளில் அதிகளவில் நிறுத்தப்பட்டு, கண்காணிப்பை பலப்படுத்தியுள்ளனர்.

# கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் தவெக இளைஞர் மீது தாக்குதல்



சென்னை:மே 08-

தவெக இளைஞர் மீது தாக்குதல் நடத்தியதாக இருவரை போலீஸார் கைது செய்து விசாரிக்கின்றனர்.சென்னை ஓட்டேரி எஸ்.எஸ்.புரம் பகுதியைச் சேர்ந்தவர் சாலமன் (26) தவெக உறுப்பினர் என கூறப்படுகிறது. இவர் தனது உறவினரை நேற்று முன்தினம், கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அப்போது சாலமனின் செல்போனுக்கு அழைப்பு வந்தது. அதில் விஜய் நடித்த திரைப்பட பாடல் ரிங்டோனாக ஒலித்தது.

அப்போது, அங்கு வந்த இருவர், சாலமனிடம், "ஏன் விஜய் பாடலை ரிங்டோனாக வைத்துள்ளாய்?" என கேட்டு தகராறு செய்ததாக கூறப்படுகிறது. இதனால் இருதரப்புக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த போதை ஆசாமிகள் இருவரும் சாலமனை தாக்கி உள்ளனர்.சம்பவம் குறித்து சாலமன் அளித்த புகாரின் பேரில் கீழ்ப்பாக்கம் போலீஸார் நடத்திய விசாரணையில், தாக்குதலில் ஈடுபட்டவர்கள் சேத்துப்பட்டு பகுதியைச் சேர்ந்த அம்பேத்கர் (35) மற்றும் செந்தில் குமார் (40) என்பது தெரிய வந்தது. இதில், அம்பேத்கர் திமுக ஆதரவாளர் எனவும் செந்தில்குமார் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது. போலீஸார் இருவரையும் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# அக்னி 6 ஏவுகணை வரலாறு படைக்க தயார்: 10,000+ கி.மீ. வரை கண்டம் விட்டு கண்டம் பாயும்




புதுடெல்லி: மே.8-

பத்தாயிரம் கி.மீ. வரை கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி6 ஏவுகணை வரலாறு படைக்க தயாராக உள்ளது என்று பாஜக தெரிவித்துள்ளது. இந்தியாவின் முதல் கண்டம் விட்டு கண்டம் பாயும் 'அக்னி6' ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) வடிவமைத்துள்ளது.

இந்த ஏவுகணை சோதனையை நடத்த தயாராக இருப்பதாகவும், அரசின் அனுமதிக்காக காத்திருப்பதாகவும் டிஆர்டிஓ தலைவர் சமீர் வி.காமத் சமீபத்தில் கூறியிருந்தார். இந்நிலையில், பாஜக தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், "அக்னி6 வல்லரசு பாதையை நோக்கி இந்தியா முன்னேறுகிறது. 10,000+ கிமீ தூரம் பாயும் திறன் மற்றும் எம்ஐஆர்வி தொழில்நுட்பத்துடன், அக்னி6 வரலாறு படைக்கத் தயாராக உள்ளது.

இந்த ஏவுகணை இந்தியாவின் பாதுகாப்பை எதிரிகள் ஊடுருவ முடியாததாக மாற்றும். அத்துடன் உலகின் மிகவும் சக்திவாய்ந்த நாடுகளின் வரிசையில் நம்மை நிலைநிறுத்தும். வலிமையான இந்தியா, பாதுகாப்பான இந்தியா" என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் பாஜக பதிவேற்றிய ஒரு காணொலியில் கூறியிருப்பதாவது: இதுவரை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய 5 நாடுகள் மட்டுமே கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சக்தியைக் கொண்டுள்ளன.

இப்போது, இந்தியா அதே வரிசையில் தனது நிலையை வலுப்படுத்தப் போகிறது. அக்னி6 இந்தியாவின் அடுத்த தலைமுறை ஏவுகணையாகும். நீண்ட தூரம் சென்று தாக்கும் திறனுடன், இந்தியாவின் வலிமை பிராந்திய அளவில் மட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியிலும் விரிவடையப் போகிறது. இங்குதான் அடுத்த பெரிய மாற்றம் நிகழ்கிறது. ஒரு ஏவுகணை, பல இலக்குகள் அதுவே எம்ஐஆர்வி தொழில்நுட்பம்.

இது ஒரே நேரத்தில் பல பணிகளைச் செய்யக்கூடியது. அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளிடம் மட்டுமே இருந்த இந்த சக்தி, இப்போது இந்தியாவுக்ும் கிடைத்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.எம்ஐஆர்வி தொழில்நுட்பம் என்பது, ஒரே ஒரு ஏவுகணை மூலம் வெவ்வேறு இலக்குகளுக்குப் பல அணு ஆயுதங்களை அனுப்ப அனுமதிக்கும் ஒரு நுட்பமாகும். இது தாக்குதல் திறனை அதிகரிப்பதுடன், எதிரி நாடுகளின் ஏவுகணை எதிர்ப்புத் தற்காப்பு அமைப்புகளை முறியடிக்கவும் உதவுகிறது.

# சுவேந்து அதிகாரியின் உதவியாளர் சுட்டுக் கொலை கொல்கத்தாவில் பரபரப்பு



கொல்கத்தா:.மே.8-

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதன் உச்சகட்டமாக, பாஜகவின் முக்கியத் தலைவரும், முதலமைச்சர் பதவிக்கு முன்னிலையில் இருப்பவருமான சுவேந்து அதிகாரியின் நெருங்கிய உதவியாளர் சந்திரநாத் ரத், கொல்கத்தா அருகே சுட்டுக் கொல்லப்பட்டார்.

புதன்கிழமை இரவு (மே 6) வட 24 பர்கானாஸ் மாவட்டத்தின் மத்தியம்கிராம் பகுதியில் சந்திரநாத் ரத் தனது காரில் சென்றுகொண்டிருந்தபோது சம்பவம் நடந்தது.

மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள், காரை வழிமறித்து அவரை நோக்கி சரமாரியாகச் சுட்டனர். இதில் பலத்த காயமடைந்த சந்திரநாத் ரத், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார். தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி ரகங்கள் மற்றும் சிசிடிவி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு போலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றுப்படி, சந்திரநாத் ரத் பயணித்த காரை ஒரு நான்கு சக்கர வாகனமும், ஒரு மோட்டார் சைக்கிளும் பின் தொடர்ந்துள்ளன. தோஹரியா பகுதியில் கார் மெதுவாகச் சென்றபோது, மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் மிக அருகில் இருந்து நான்கு முறை துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில் மூன்று குண்டுகள் சந்திரநாத் ரத்தின் மார்பு, வயிறு மற்றும் தலைப் பகுதியில் பாய்ந்துள்ளன.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளில் பதிவு எண் பலகை இல்லை என்பது இது ஒரு திட்டமிடப்பட்ட படுகொலை என்பதை உறுதிப்படுத்துகிறது.

சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட தோட்டாக்களை ஆய்வு செய்ததில், ஆஸ்திரியாவில் தயாரிக்கப்பட்ட அதிநவீன 'கிளாக் பிஸ்டல்' பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனத் தடயவியல் நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர். தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு காரைப் போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர், அதன் எண் பலகை மாற்றப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

சந்திரநாத் ரத்துடன் காரில் இருந்த ஓட்டுநரும் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்துள்ளார். அவர் தற்போது கொல்கத்தாவில் உள்ள தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கொல்லப்பட்ட சந்திரநாத் ரத், பவானிப்பூர் தேர்தல் உள்ளிட்ட பல முக்கிய அரசியல் களங்களில் சுவேந்து அதிகாரிக்கு வலதுகரமாகச் செயல்பட்டவர். சுவேந்து அதிகாரியின் அரசியல் நகர்வுகளில் முக்கியப் பங்காற்றியவர் என்பதால், இந்தப் படுகொலை அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது.

இந்தக் கொலைச் சம்பவத்திற்குத் திரிணமூல் காங்கிரஸ் தான் காரணம் என பாஜக குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள திரிணமூல், வன்முறைக்குத் தங்களது கட்சியில் இடமில்லை என்றும், முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளது.

மேற்கு வங்கத்தில் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு பாஜக மற்றும் திரிணமூல் காங்கிரஸ் தொண்டர்களிடையே மோதல் ஏற்பட்டு வருவதால், தேர்தல் ஆணையம் மாநில நிர்வாகத்திற்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. வன்முறையில் ஈடுபடுபவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் எனத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் உத்தரவிட்டுள்ளார்.



■ திமுக கழகத் தலைவரும் தமிழக முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களை மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற இரா.ஜெயராமகிருஷ்ணன் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளரும், எம். பியுமான கே.ஈஸ்வரசாமி நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்



■ முதல்வர் ரங்கசாமி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனை சந்தித்து தனது ராஜினாமா கடிதத்தை அளித்து, மீண்டும் ஆட்சியமைக்க உரிமை கோரினார்.



■ *புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியின் இல்லத்தில் தலைமைச் செயலர் மற்றும் அனைத்து துறை செயலர்கள், டிஜிபி, டிஐஜி உள்ளிட்ட அதிகாரிகள் சந்திக்க காத்திருக்கின்றனர்*



■ முதலமைச்சர் ரங்கசாமியை தலைமை செயலர், டிஜிபி, அரசு செயலர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.



# தவெக எம்எல்ஏக்கள் தங்கியிருப்பதால் பூஞ்சேரியில் போலீஸ் குவிப்பு

மாமல்லபுரம்:மே 08-

பூஞ்சேரி பகுதியில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் சட்டப்பேரவை தேர்தலில் தவெக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம்எல்ஏக்கள் 2வது நாளாக தங்கவைக்கப்பட்டுள்ளதால் பாதுகாப்பு பணிக்காக ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கும் கடந்த மாதம் 23ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்றது. மேலும், வாக்கு எண்ணிக்கை கடந்த 4ம் தேதி நடைபெற்றது. இதில், தமிழக வெற்றிக் கழகம் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 108 சட்டப்பேரவை உறுப்பினர்கள் சென்னையை அடுத்த பனையூரில் உள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில், தலைவர் விஜய் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர்.பின்னர், அங்கிருந்து புறப்பட்ட 80 எம்எல்ஏக்கள் மாமல்லபுரத்தை அடுத்த பூஞ்சேரி பகுதியில் அமைந்துள்ள போர் பாயிண்ட் என்ற தனியார் நட்சத்திர விடுதிக்கு வருகை தந்தனர். மேலும், தவெக ஆட்சி அமைக்கும் வரை இந்த விடுதியில் தங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியினர் தெரிவித்தனர். மேலும், தவெகவை சேர்ந்த எம்எல்ஏக்கள் தங்கியுள்ளதால் விடுதியின் முகப்பு பகுதியில் 2வது நாளாக பாதுகாப்பு பணிக்காக ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஈசிஆர் சாலையில் போக்குவரத்து மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன

# 12ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு அரசு வேலை! தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் அறிவிப்பு

தென்காசி மே 08-

தென்காசி மாவட்ட குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் செயல்படும் 'மிஷன் வத்சாலயா' திட்டத்தின் கீழ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் காலியாக உள்ள ஒரு பணியிடத்தை நிரப்ப மாவட்ட நிர்வாகம் முன்வந்துள்ளது.

குழந்தைகள் உதவி மையம் (1098) சார்ந்த வழக்குப் பணியாளர் பணியிடம் முற்றிலும் தற்காலிக தொகுப்பூதிய



அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது.மாதம் ரூ.18,000/ (தொகுப்பூதியம்), கல்வித்தகுதி: அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், வயது வரம்பு: 42 வயதிற்குள் இருத்தல் வேண்டும். தகுதியுள்ள நபர்கள் இதற்கான விண்ணப்பப் படிவத்தை தென்காசி மாவட்ட அதிகாரப்பூர்வ இணையதளமான https://tenkasi.nic.in என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது தென்காசி மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகில் நேரடியாகப் பெற்றுக்கொ ள்ளலாம்.விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு,எண்.14, பெருமாள் கோவில் தெரு (SPA Hall),செவன்த்டே பள்ளி அருகில்,தென்காசி – 627 811.தொலைபேசி: 04633291125கடைசித் தேதி:இந்தச் செய்தி வெளியான நாளிலிருந்து 15 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.*முக்கிய குறிப்பு:*முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், கல்விச் சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாதவை மற்றும் காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்களின் தகுதி மற்றும் முன் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.



# தமிழ் தொண்டருக்கு தவெகவின் வீரவணக்கம்! கால்டுவெல் சிலைக்கு மாலை அணிவித்து நெல்லையில் கொண்டாட்டம்

திருநெல்வேலி மே 08-

திருநெல்வேலி தெற்கு மாவட்டத் தமிழக வெற்றி கழகம் சார்பில், தமிழ் மொழிக்கு உலக அளவில் அங்கீகாரம் பெற்றுத் தந்த திராவிட மொழியியல் தந்தை பேராயர் கால்டுவெல் அவர்களின் 212வது பிறந்தநாள் விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தவெக மாவட்டச் செயலாளர் ராஜகோபால் தலைமையில், இடையன்குடியில் அமைந்துள்ள பேராயர் கால்டுவெல் அவர்களின் நினைவு இல்லத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அங்கு கூடியிருந்த பொதுமக்களுக்கும் கட்சியினருக்கும் இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் ஜீவிதா, சதீஷ் குமார், கலையரசி, வள்ளியூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் நாகராஜன், திசையன்விளை பேரூர் கழகச் செயலாளர் கில்லி ராஜா, ஒன்றியப் பொருளாளர் பொசுந்தரி, செயற்குழு உறுப்பினர் சிந்தியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், வள்ளியூர் தெற்கு ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் அன்னஜோதி, வள்ளியூர் பேரூர் கழகச் செயலாளர் ராஜா, 17வது வார்டு கவுன்சிலர் பொன் பாண்டி, மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர் லிவிங்ஸ்டன், இராதாபுரம் கிழக்கு ஒன்றியப் பொருளாளர் முத்துராமலிங்கம், நகரத் துணைச் செயலாளர் கண்ணன், மாவட்ட வழக்கறிஞர் அணி சுரேஷ், ஜெம்ஸ் நில கிருஷ்ணன், மகளிரணி அமைப்பாளர் வடிவு, பாஸ்கர், சுதன், மகேஷ் பிரபு, அபிநயா மற்றும் ஏராளமான ஒன்றிய, நகர, கிளை, வார்டு கழக நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருநெல்வேலி தெற்கு மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர் லிவிங்ஸ்டன், இராதாபுரம் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் இடையன்குடி கிளை நிர்வாகிகள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.



■ திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் ஒன்றியம் இடையன்குடியில் பிஷப் கால்டுவெல்லின் 212 ஆவது பிறந்த தின விழாவை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# அரசுக் கல்லூரிகளில் சேர மாணவர்கள் இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

## கல்லூரிக் கல்வி ஆணையர் அறிவிப்பு

சென்னை:மே 08-

தமிழகம் முழுவதும் உள்ள 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர இன்றுமுதல் மாணவர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இது தொடர்பாக கல்லூரிக் கல்வி ஆணையர் இ.சுந்தரவல்லி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 202627ம் கல்வி ஆண்டில் இளங்கலை பட்டப் படிப்பு முதலாம் ஆண்டில் சேர மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கு www.tngasa.in என்ற இணையதளத்தில் மே 7 (இன்று) முதல் 29ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.இணையதள வசதி இல்லாத மாணவர்கள்




விண்ணப்பிக்க ஏதுவாக, அனைத்து அரசு கலை, அறிவியல் கல்லூரிகளிலும் சேர்க்கை உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.50. எஸ்சி, எஸ்டி மாணவர்கள் விண்ணப்பக் கட்டணம் (ரூ.48) செலுத்த தேவையில்லை. பதிவுக் கட்டணம் ரூ.2 மட்டும் செலுத்தினால் போதும். கட்டணங்களை டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, நெட் பேங்கிங், யுபிஐ மூலம் ஆன்லைனில் செலுத்தலாம்.தமிழகம் முழுவதும் மொத்தம் உள்ள 181 அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் 159 பாடப் பிரிவுகளில் 1.27 லட்சம் இடங்கள் உள்ளன. மாணவர்கள் தாங்கள் விரும்பும் கல்லூரியில் விருப்பப்பட்ட பாடப் பிரிவுகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ராஜினாமா



■ புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கு தார்மீக பொறுப்பேற்று மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் பதவியை ராஜினாமா செய்தார் எம்பி வைத்திலிங்கம்

# தமிழ் நாட்டில் 14 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

## வானிலை ஆய்வு மையம்

சென்னை: மே 08-

தமிழ் நாட்டில் 14 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு என வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் இன்று முதல் வருகின்ற மே 13ஆம் தேதி வரை தென் மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு எச்சரிக்கை என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.Long Distance Bus & Rail



இன்றைய தினம் நீலகிரி, ஈரோடு, கோவை, திருப்பூர், நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், தென்காசி, ருநெல்வேலி,கன்னியாகுமாரி ஆகிய 14 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தொடச்சியாக நாளைய தினத்தை பொறுத்தவரை நீலகிரி, ஈரோடு, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமாரி, புதுவை , தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.அதேபோன்று மே 9 மற்றும் 10ஆம் தேதிகளில் தமிழக டெல்டா மாவட்டங்களிலும் தென் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழைக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மே 13ஆம் தேதி அன்று டெல்டா மாவட்டங்களில் மற்றும் தென் மாவட்டங்களில் உள்ள பகுதிகளுக்கும் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000